**பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06**

**முன்னிலை : முனைவர் சு. நாகராஜ முருகன்**

ந.க.எண். 065/ஆ2/2024, நாள்: 23.04.2024

பொருள்: சென்னை-06, பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் –"புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-27" செயல்படுத்துதல் – கற்போர், தன்னார்வலர்களைக் கண்டறிதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு

பார்வை: புதிய பாரத திட்ட ஏற்பளிப்புக் குழு கூட்டம் (Project Approval Board Meeting), நாள் : 22.03.2024

*****

தமிழ்நாட்டில், கடந்த 2022-23ஆம் ஆண்டு முதல், 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, 15 வயதுக்கு மேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடும் வகையில், புதிய பாரத எழுத்தறிவுத் திட்டமானது முற்றிலும் தன்னார்வல முறையில், அனைத்து 38 மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக கடந்த இரண்டு ஆண்டுகளில் 10 இலட்சம் பேர் தங்களது அடிப்படை எழுத்தறிவுக் கல்வியைப் பெற்று பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறு பெற்ற கல்வியின் மூலம் அன்றாட வாழ்வில் தற்சார்பு, வாழ்வியல் திறன்களில் மேம்பாடு, சுய வருவாய் ஈட்டுதலில் முன்னேற்றம், அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த நிதி மேலாண்மையில் தெளிவு, அடிப்படைச் சட்டங்களிலும் மற்றும் அரசு சார் திட்டங்களிலும் போதுமான விழிப்புணர்வு போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைப் பெற்று இத்திட்டக் கற்போர்கள் பயனடைந்துள்ளனர்.

தற்போது, பார்வையிற் குறிப்பிடப்பட்டுள்ள திட்ட ஏற்பளிப்புக் குழு கூட்ட ஒப்புதல்களின்படி, வருகின்ற 2024-25ஆம் ஆண்டிற்கு தங்கள் மாவட்டம் சார்ந்த அனைத்து ஒன்றியங்களுக்கான கற்போர் மற்றும் தன்னார்வலர்களின் எண்ணிக்கை இலக்கினை உரிய கணக்கெடுப்பின் வாயிலாக நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில், 100% எழுத்தறிவை உறுதி செய்திட அனைத்து மாவட்டங்களையும் 100 சதவீத எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக அறிவிப்பு செய்திடுவது மிகவும் அவசியமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, மாநிலம் முழுவதும், மாவட்டம் வாரியாக, 15 வயதுக்குமேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத அனைவரையும் கண்டறியக் கூடிய விரிவான கணக்கெடுப்பை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, தங்கள் மாவட்டத்தில் அனைத்து கிராம பஞ்சாயத்து/வார்டு அளவில் 15 வயதுக்குமேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாதோர் அனைவரையும் முழுமையாகக் கண்டறியும் கணக்கெடுப்பை <u>வருகின்ற 2024-மே மாதம் முதல் வாரத்தில்</u> தொடங்க வேண்டும். இக்கணக்கெடுப்பு சார்ந்த படிவம் இணைப்பு-2இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**1. எழுதப்படிக்கத் தெரியாதோரின் விவரங்களைச் சேகரிக்கும் வழிமுறைகள் :**

- தமிழ் மொழியில் எழுத்தப்படிக்கத் தெரியாத மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை எண்ணறிவைப் பெறாத நபர்களை இக்கணக்கெடுப்பின் வாயிலாகக் கண்டறிய வேண்டும்.
- ஊர் பெயரை வாசிக்கச் செய்தும், தனது பெயரை எழுதச் சொல்லியும், சிறிய அடிப்படைக் கணக்குகளில் திறன்களை சோதித்தும் எழுதப்படிக்கத் தெரியாதோரை அடையாளம் காண வேண்டும்.
- அனைத்து கிராம பஞ்சாயத்து/வார்டு அளவில், 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாத அனைத்துக் கல்லாதோரின் விவரங்களை முழுமையாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி சேகரிக்க வேண்டும்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளின் அருகாமைக் குடியிருப்புகளில் வசிக்கும் கல்லாதோரின் விவரங்களை, அந்தந்த பள்ளிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பு புள்ளி விவரப் பதிவேட்டின்படி சேகரிக்க வேண்டும்.

❖ பள்ளிகளில் பயின்று வருகின்ற மாணவ, மாணவியரின் உதவியுடன் அவர்கள் சார்ந்த குடும்பம் மற்றும் உறவினர்களில், 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாதோரின் விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

❖ ஒவ்வொரு கிராம் / வார்டு அளவில், ஆரம்ப சுகாதார நிலையம் / அங்கன்வாடி மையத்தில் ஏற்கனவே பராமரிக்கப்படுகின்ற குடும்ப விவரம் / கணக்கெடுப்புப் பதிவேட்டில் “கல்வி நிலை" என்கிற பகுதியில் உள்ள 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாதோரின் விவரங்ளைச் சேகரிக்க வேண்டும்.

❖ வட்டார வளர்ச்சி அலுவலகம் அல்லது அதன்தொடர்புடைய அலுவலகங்களில் பராமரிக்கப்படும் 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்களின் பதிவேடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு சார்ந்த பதிவேடுகள் வாயிலாக விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

❖ பள்ளி மற்றும் கல்லூரி சார்ந்த நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், சாரண,சாரணியர், தேசிய மாணவர் படை மாணவர்களின் உதவியுடன் விவரங்களைச் சேகரிக்கலாம்

❖ அந்தந்த பகுதியில் உள்ள 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உதவியுடன் முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாதோரின் விவரங்களைச் சேகரிக்கப்பட வேண்டும்.

❖ பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்-ஆசிரியர் கழக உறுப்பினர்களின் உதவியுடன் விவரங்களைச் சேகரிக்கலாம்

❖ நேரு யுவகேந்ரா, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் மாவட்ட, ஒன்றிய அளவில் சிறப்பாக செயல்படுகின்ற தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் எழுதப்படிக்கத் தெரியாதோரின் விவரங்களைச் சேகரிக்கலாம்

❖ ஆர்வமுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்/ விருப்பமுள்ள ஆசிரியர்கள்/பணியாளர்கள், படித்த இளைஞர்கள், வயது வந்தோர் கல்வித் திட்டங்களில் பணிபுரிந்த அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் மற்றும் தன்னர்வலர்களின் உதவியுடன் விவரங்களைச் சேகரிக்கலாம்.

- ❖ பிற மாநிலத்தவர்கள், புலம் பெயர் தொழிலாளர்கள் மற்றும் மலைவாழ் பகுதிகளைச் சார்ந்தவர்களில் எழுதப்படிக்கத் தெரியாதோரைக் கண்டறிய வேண்டும்.
- ❖ கல்லாதோர் கணக்கெடுப்பின்போது, எந்த ஒரு நபரும்/வீடும் விடுபடவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- ❖ மலைவாழ் பகுதி, கிராமம் மற்றும் நகர்புறங்களில் உள்ள அனைத்து குடியிருப்புப் பகுதிகளும் விடுபடாமல் இக்கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும்.

**2. தன்னார்வலர்களைக் கண்டறிதல் :**

கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 10 இலட்சம் கற்போர்கள் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி பெற்று பயனடைந்துள்ளனர் என்கிற சாதனைக்குக் காரணமான, தன்னலமற்று, அற்பணிப்போடு தொடர்ந்து கல்வி சேவையாற்றி வருகின்ற அனைத்து தன்னார்வலர்களுக்கும் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் தனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

- ❖ கற்போர் எழுத்தறிவு மையம் செயல்பட அனுமதிக்கப்படும் தொடக்க, நடுநிலை, உயர் மற்றும் மேனிலைப் பள்ளியின் தலைமையாசிரியர், தமது பள்ளிசார் மேலாண்மைக் குழு (SMC) அல்லது பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் (PTA) ஒத்துழைப்புடன் தன்னார்வலர்களைக் கண்டறிந்து கற்போர் எழுத்தறிவு மையத்தினை செயல்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- ❖ ஏற்கனவே நடந்து முடிந்த வயது வந்தோர் கல்வித்திட்ட விதிமுறைகளை முன்னுதாரணமாகக் கொண்டு, கற்போர் எழுத்தறிவு மையங்களுக்கான தன்னார்வலர்களின் குறைந்த பட்ச கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு எனக் கொள்ளலாம்.
- ❖ தன்னார்வலர்களாக செயல்பட பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

- நேரு யுவகேந்ரா, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் மாவட்ட, ஒன்றிய நகர் மற்றும் கிராம புற அளவில் சிறப்பாக செயல்படுகின்ற தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் தன்னார்வலர்களாகச் சேவையாற்றலாம்.
- நிறுவனங்களின் சமுதாய பங்களிப்புச் செயல்பாடுகளின் கீழ் தன்னார்வலர்களைப் பெற்று அவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், சாரண, சாரணியர், தேசிய மாணவர் படை மாணவர்கள் தன்னார்வலர்களாகச் செயலாற்றலாம்.
- ஆசிரியர்கள், வயது வந்தோர் கல்வித் திட்டங்களில் ஏற்கனவே பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்கள், ஒய்வு பெற்ற ஆசிரியர்கள், படித்த பெண்கள், இல்லத்தரசிகள், திருநங்கைகள், திருநம்பிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் மைய தன்னார்வலர்களாகச் சேவையாற்ற அனுமதிக்கலாம்.
- தன்னார்வலர்களுக்கு மதிப்பூதியம் அல்லது தொகுப்பூதியம் ஏதும் வழங்கிட இத்திட்ட விதிகளில் வழிவகை ஏதும் செய்யப்படவில்லை. அதற்கான நிதி ஒதுக்கீடும் இல்லை. எனவே, தன்னார்வலர்களுக்கு அவர்கள் ஆற்றும் இக்கல்வி சேவைக்கு மதிப்பூதியம் அல்லது தொகுப்பூதியம் ஏதும் வழங்கப்பட மாட்டாது. இருப்பினும், அவர்களது கல்வி சேவையை சிறப்பிக்கும் வகையில் அனைத்து தன்னார்வலர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

3. **கற்போர் மற்றும் தன்னார்வலர்களின் விவரங்களை EMIS – Mobile App-இல் பதிவேற்றம் செய்தல் :**

- இணைப்பில் காணும் படிவத்தின்படி சேகரிக்கப்பட்ட கல்லாதோரின் விவரங்களை அந்தந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளித் தலைமையாசியர்களின் EMIS – Mobile App-இல், புதிய பாரத எழுத்தறிவுத் திட்ட Logo-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள "Add Learners" Tab-யை Click செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். இச்செயல்பாட்டிற்கு அந்தந்த பள்ளி சார்ந்த ஆசிரியர் பயிற்றுநர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

- ❖ பள்ளித் தன்னார்வலராகக் கண்டறியப்பட்டோரின் விவரங்களை சார்ந்த பள்ளித் தலைமையாசியர்களின் EMIS – Mobile App-இல்,புதிய பாரத எழுத்தறிவுத் திட்ட Logo-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள "Add Volunteers" Tab-யை Click செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- ❖ இதன் பின்னர், Learners–Volunteers Mapping-யை EMIS–Mobile App-இல் மேற்கொள்ள வேண்டும்.

**குறிப்பாக, 2024-ஜீன் மாதம் முதல் திட்டச் செயல்பாடுகளைத் தொடங்கிட இவ்வியக்ககத்தினால் திட்டமிடப்பட்டுள்ளாதலால், 2024-மே மாதம், 24ஆம் தேதிக்குள் எழுதப்படிக்கத் தெரியாதோர் மற்றும் தன்னார்வலர்களின் கணக்கெடுப்புப் பணியை நிறைவு செய்து, அவ்விவரங்களை சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களின் வாயிலாக EMIS-Mobile App-இல் பதிவேற்றம் செய்ய அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**4. ஒருங்கிணைப்புச் செயல்பாடுகள் :**

- ❖ இக்கணக்கெடுப்புப் பணியினை மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் (DIET), அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், DIET விரிவுரையாளர்கள், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட உதவித் திட்ட அலுவலர்/உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வளமைய (பொ) மேற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்கள், ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள்/அங்கன்வாடி மைய பணியாளர்கள், பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பெற்றோர்-ஆசிரியர் கழக உறுப்பினர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ள வேண்டும்.
- ❖ தொண்டு நிறுவனங்கள், தனியார் பெருநிறுவனங்கள் மற்றும் அரசு சார் பொதுத்துறை பெருநிறுவனங்கள் மற்றும் இதர தொடர்புடைய

அரசுத்துறைகள் மற்றும் திட்டங்களின் ஒருங்கிணைப்புடனும் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் (District Literacy Mission Authority) கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அக்கூட்டத்தின் வாயிலாக இச்செயல்பாடுகள் சார்ந்து சிறப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றி, மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி 15 வயதுக்கு மேற்பட்ட கல்லாதோரை 100% கண்டறியும் கணக்கெடுப்புப் பணிகளை **2024-மே மாதம் 24ஆம் தேதிக்குள்** முடிக்க வேண்டும். தங்கள் மாவட்டத்தினை 100% எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக விரைவில் அறிவிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு** : கல்லாதோர் மற்றும் தன்னார்வலர் கணக்கெடுப்பு படிவம்

இயக்குநர்
23/4/24

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் (உரிய வழியாக)
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் (உரிய வழியாக)
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) (உரிய வழியாக)

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது

1. அரசு செயலர்
   பள்ளிக் கல்வித் துறை
   தலைமைச் செயலகம், சென்னை-09.
2. மாநிலத் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் (TNLMA-GC)
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம், சென்னை-06.

நகல் கனிவுடன் அனுப்பப்படுகிறது

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-06
2. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-06.
3. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-06.

**School Education Department**
**Directorate of Non-Formal and Adult Education**
**Puthiya Bharatha Ezhutharivu Thittam 2024-25**

## Learner's Survey Format

<table>
<tr><td colspan="3">Name of the District :</td><td colspan="6">Name of the Block :</td></tr>
<tr><td colspan="2">Name of the Habitation :</td><td colspan="7"></td></tr>
<tr><td colspan="9">A. Details of the Surveyer :</td></tr>
<tr><td>Survey Conducted by (Tick) :</td><td colspan="2">BRTE</td><td colspan="2">Teacher</td><td colspan="4">Volunteer</td></tr>
<tr><td>Name (BRTE/Teacher/Volunteer) :</td><td colspan="8">Thiru/Tmt:</td></tr>
<tr><td>Contact Number (BRTE/Teacher/Volunteer) :</td><td colspan="8"></td></tr>
<tr><td colspan="9">B. Details of the Newly Indentified Learner:</td></tr>
<tr><td>Name of the newly indentified Learner :</td><td colspan="4">Thiru/Tmt:</td><td colspan="4">திரு./திருமதி:</td></tr>
<tr><td>Father / Mother Name :</td><td colspan="4">Thiru/Tmt:</td><td colspan="4">திரு./திருமதி:</td></tr>
<tr><td>Mother Tongue :</td><td colspan="8"></td></tr>
<tr><td>Residence with Postal Address :</td><td colspan="8"></td></tr>
<tr><td>Age :</td><td colspan="3">Years</td><td>Gender: (Tick)</td><td>M</td><td>F</td><td colspan="2">TG</td></tr>
<tr><td>Category (Tick) :</td><td>General</td><td>BC</td><td>MBC</td><td>SC</td><td>ST</td><td>Minority</td><td colspan="2">Others</td></tr>
<tr><td>Whether Differently-abled (Tick) :</td><td colspan="4">Yes</td><td colspan="4">No</td></tr>
<tr><td>Whether Never Enrolled or Drop Out (Tick) :</td><td colspan="2">NE</td><td colspan="6">DO (If Dropout, kindly mention class last studied)</td></tr>
<tr><td>Contact Number of the newly indentified Learner: :</td><td colspan="8"></td></tr>
<tr><td>Neighbourhood School in which the learner to be enrolled (PUPS/APS/PUMS/AMS/) with address :</td><td colspan="8"></td></tr>
<tr><td>Contact Number of the Concerned School HM :</td><td colspan="8"></td></tr>
<tr><td>Special Mention about the newly identified learner (if any) (Linguistic Minority/other State/Others) :</td><td colspan="8"></td></tr>
<tr><td>Date of Survey :</td><td colspan="2"></td><td colspan="6">Signature:</td></tr>
</table>

**School Education Department**
**Directorate of Non-Formal and Adult Education**
**Puthiya Bharatha Ezhutharivu Thittam 2024-25**

**Volunteers Survey Format**

| | | |
|---|---|---|
| Name of the District : | Name of the Block : | |
| Name of the Habitation : | | |
| **A. Details of the Surveyer :** | | |
| Survey Conducted by **(Tick)** : | HM | Teacher |
| Name of the HM/Teacher : | **Thiru/Tmt:** | |
| Contact Number (HM/Teacher) : | | |
| **B. Details of the Newly Indentified Learner:** | | |
| Name of the Volunteer : | **Thiru/Tmt:** | **திரு./திருமதி:** |
| DOB : | | |
| Mother Tongue : | | |
| Contact Number : | | |
| Academic Qualifications : | | |
| Neighbourhood School in which the Volunteer to be mapped (PUPS/APS/PUMS/ AMS/) with address : | | |
| Date of Joining in the Literacy Centre : | | |
| Contact Number of the Concerned School HM : | | |
| Volunteer Type (Teachers/ITK/School Students/College students//Others) : | | |
| Date of Survey : | | Signature: |